பக்கங்கள்: 08
காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 18 செவ்வாய்க்கிழமை 06.12.2022 கதிர் 283

# இளைஞர் ஒருவர் வெட்டிக் கொலை!

## கொழும்பில் கொடூரம்

இளைஞர் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு இன்று தெரிவித்துள்ளது.

கொழும்பு, தெஹிவளை – அபோன்சு மாவத்தைப் பகுதியில் இந்தச் 8

# நாட்டை விட்டு வெளியேறாதீர்

## இலங்கை விரைவில் மீண்டெழும்; ஜனாதிபதி ரணில் முழு நம்பிக்கை



உலகின் வளர்ந்த நாடுகளுடன் இணைந்து இலங்கையின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதே எனது நோக்கம். நாடு நிச்சயமாக பொருளாதார சுபீட்சத்தை நோக்கி நகரும். தாய் நாட்டை விட்டு யாரும் வெளியேறத் தேவையில்லை. 2

# 31 அரசியல் கைதிகள் மாத்திரமே சிறைகளில்

## சபையில் நீதி அமைச்சர் தகவல்



நாட்டிலுள்ள சிறைச்சாலைகளில் 31 அரசியல் கைதிகள் மாத்திரமே உள்ளனர் என்று நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சுகளுக்கான 8

# வேலணை பிரதேச சபையின் 'பட்ஜட்' இன்று நிறைவேற்றம்

## கூட்டமைப்பு வெளிநடப்பு



(இ.கலையமுதன்)

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஆளுகைக்குட்பட்ட வேலணை பிரதேச சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் 8 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

வேலணை பிரதேச 8

# கட்டணம் உயர்வு இன்றேல் 6 மணி நேரம் மின்வெட்டு!



மின்சாரக் கட்டணத் திருத்தத்தை மேற்கொள்ளாவிட்டால், அடுத்த வருடத்தில் 6 மணித்தியால மின்சார விநியோகத் தடைக்குச் செல்ல வேண்டியேற்டும் என்று அரசு அறிவித்துள்ளது.

எரிசக்தி மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கஞ்சன விஜேசேகர இன்று நாடாளுமன்றத்தில் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மின்சார அலகு ஒன்றுக்கான செலவு 56 ரூபா 90 சதமாக உள்ளபோதும், 8

# நம்பிக்கை வைத்து பேச்சுக்கு வாருங்கள்

## ரணில் மீண்டும் அழைப்பு

கடந்த கால மனக்கசப்புக்களைப் பேசிக்கொண்டிருப்பதால் காலம்தான் வீண்விரயமாகும். வெளியாரின் தலையீடு இல்லாமல் நாம் ஒன்றுகூடி பேச்சு மூலம் தீர்வை அடைவோம். அதில் நம்பிக்கை வைத்து தமிழ்த் தலைவர்கள் செயற்படவேண்டும்.

– இவ்வாறு ஆலோசனை கூறியுள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

தமிழ் மக்களுக்கு பேச்சு மூலமான தீர்வு என்பது மாயக் காற்றாக மாறிக்கொண்டிருக்கும் கனவு என்று 2

# வட மாகாண ஆசிரியர்கள் வெள்ளியன்று ஆளுநர் செயலகம் முன்பாகப் போராட்டம்

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் முறைகேடுகள் மற்றும் குறைபாடுகள் தொடர்பாகவும் அதற்குரிய நடவடிக்கை எடுக்கக் கோரி வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் முன்பாக எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்குக் கவனயீர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உபதலைவர் தீபன் திலீசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

வடக்குக் கல்வித்துறை சீர்கேடுகள் தொடர்பில் 100 பக்க முறைப்பாடு எம்மால் ஆளுநருக்கு வழங்கப்பட்டது. அதற்கு அமைவாக விசாரணைக்குழுவும் அமைக்கப்பட்டது. ஆனால், 8

# மருந்துகள் கிடைக்க வழிவகை செய்யக் கோரி

## வடக்கு, கிழக்கு பெண்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் போராட்டம்



(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

அத்தியாவசிய மருந்து வகைகளும் மருத்துவ சாதனங்களும் மக்களுக்குக் கிடைக்க உடனடியாக வழிவகை செய்யக் கோரி யாழ்ப்பாணத்தில் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம் முன்பாக இன்று காலை 10 மணியளவில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கு பெண்கள் ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் போராட்டத்தில், 2

# யாழ். பல்கலை மாணவிகளுக்கு இளைஞர்கள் பாலியல் தொல்லை

## கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் கொக்குவிலில் உள்ள பெண்கள் விடுதி மற்றும் வாடகை அறைகளில் தங்கி உள்ள மாணவிகள் பல்கலைக் கழகத்துக்குக் காலையிலும் மாலையிலும் வீதியால் செல்லுகின்ற போது இளைஞர்கள் சிலர் பாலியல் தொல்லை கொடுக்கின்றனர் என்று கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பல்கலைக் கழக நிர்வாகத்துக்கு கடந்த மாதம் 300 மாணவிகளின் கையெழுத்துடன் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இருப்பினும் மாணவிகள் மீதான ஆசாமிகளின் பாலியல் 8

# 'மே 9' வன்முறை விசாரணை அறிக்கைக்கு என்ன நடந்தது?

## சபையில் உடன் சமர்ப்பிக்குமாறு விமல் வீவன்ச எம்.பி. வலியுறுத்து



இலங்கையில் கடந்த மே மாதம் 9 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையை உடனடியாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் 8

# 2023 ஆம் ஆண்டின் முதல் அமர்வு ஜனவரி 17 இல்



அடுத்த ஆண்டு முதலாவது நாடாளுமன்ற அமர்வை 8

# யாழ். பல்கலைக்கழகத்தில்

## மருத்துவ மாணவர் ஆராய்ச்சி மாநாடு



யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மருத்துவ பீடத்தின் ஐந்தாவது மருத்துவ மாணவர் ஆராய்ச்சி மாநாடு நேற்று மருத்துவ பீட கூவர் அரங்கில் இடம்பெற்றது. 2

## நாட்டைவிட்டு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

–இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தமது நாட்டில் தமக்கான உலகத்தை உருவாக்குவது இளைஞர்களின் பொறுப்பாகும் என்றும், அதுவே உண்மையான திறமை என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

2023ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் தொடர்பில் இளைஞர்களுடன் நடந்த இணையத்தள உரையாடலில் கருத்துத் தெரிவிக்கும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

2025 ஆம் ஆண்டளவில் வளமான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்துக்கு இளைஞர்கள் பங்களிக்க வாய்ப்பு இருக்கின்றது.

அன்று ஆசியாவில் ஜப்பானுக்கு அடுத்தபடியாக இலங்கை இருந்தது. ஆனால், இன்று நாட்டின் பொருளாதாரம் வேகமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

இன்றைய இளைஞர்கள் நாட்டை விட்டு வெளியேறும் போக்கு அதிகரித்துள்ளது. தற்போதுள்ள அரசமைப்பில் அவர்கள் மகிழ்ச்சியடையாததே இதற்குக் காரணம்.

இளைஞர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றி நாட்டுக்குப் பொருத்தமான பொருளாதார அமைப்பை விரைவாக அமைக்க வேண்டும்.

கடந்த ஓகஸ்ட் மாதம் கொண்டு வரப்பட்ட இடைக்கால வரவு – செலவுத் திட்டத்தின் மூலம் நாட்டின் வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை ஒரு குறிப்பிட்ட மட்டத்துக்குக் கொண்டு வர முடிந்தது.

அந்தஸ்திரத்தன்மையின் அடிப்படையில் புதிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் பயணம் இவ்வருட வரவு – செலவுத் திட்டத்துடன் ஆரம்பிக்கும் – என்றார். பொதுச்செலவு முகாமைத்துவம் தொடர்பான விசாரணைக்குப் பதிலளித்த ஜனாதிபதி,

புதிய நிதி கண்காணிப்பு குழுக்களை நியமிப்பதற்கும் நாடாளுமன்றத்தில் தற்போதுள்ள குழுக்களைப் பலப்படுத்துவதற்கும் இவ்வருட வரவு – செலவுத் திட்டத்தில் முன்மொழிவுகள் உள்ளன. இந்த நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் நாடாளுமன்ற வரவு – செலவுத் திட்ட அலுவலகம் ஒன்றை நிறுவுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சி ஒரேயடியாக ஏற்படவில்லை. நாடாளுமன்றத்தில் பல விவாதங்கள் இடம்பெற்ற போதிலும் அவ்வாறானதொரு பொருளாதார நெருக்கடி குறித்த அறிக்கையை எவரும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை.

அரச சேவை தொடர்பான நிர்வாகங்களில் கடந்த காலங்களில் தேவையற்ற வகையில் அரச சேவைகளை நிரப்பியமையே இன்று நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிக்குக் காரணமாகியுள்ளது.

நாடு பொருளாதார அபிவிருத்தியை நோக்கி நகர்ந்தாலும் 2035 ஆம் ஆண்டளவில் அரச சேவையில் இருந்து ஓய்வு பெறுபவர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருக்கும். அதனால் ஓய்வூதியம் வழங்குவதில் பாரிய பிரச்சினைக்கு முகங்கொடுக்க நேரிடும் என்றார்.

.இலங்கை டெலிகொம், ஹில்டன் போன்ற அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் தனியார் மயமாக்கப்படுமா என்ற கேள்விக்குப் பதிலளித்த ஜனாதிபதி,

நாணய இழப்பு மற்றும் வெளிநாட்டு கையிருப்பு காரணமாக வீழ்ச்சியடைந்துள்ள இலங்கையின் பொருளாதாரத்தை மீட்பதற்காக இலாபம் ஈட்டாத அரசு நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்தி, அதன் மூலம் ரூபாயை வலுப்படுத்த வேண்டும் –என்றார்.

## வடக்கு, கிழக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்தியாவசிய மருந்து வகைகளும் மருத்துவ சாதனங்களும் மக்களுக்குக் கிடைக்க வேண்டும், மருந்துகளை உடனடியாகப் பெற வழிவகை செய்ய வேண்டும், பெண்களின் சுகாதார உரிமை உறுதிப்படுத்த வேண்டும், சுகாதார உரிமை எமது உரிமை போன்ற வாசகங்கள் அடங்கிய அட்டைகள் காட்சிப்படுத்தப்பட்டன.

## நம்பிக்கை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இந்திய ஆங்கில ஊடகத்துக்குத் தெரிவித்திருந்தார். நல்லாட்சி அரசின் காலத்தில் தமிழ்த் தரப்பின் கடும் எதிர்ப்புக்கும் மத்தியிலும், புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சியில் முழுமையாக நம்பி ஈடுபட்ட ஒருவர் இவ்வாறான நம்பிக்கையீனத்தை வெளிப்படுத்தியுள்ள சூழலில், உங்களின் தீர்வு முயற்சி எவ்வாறு முன்நகரப் போகின்றது என்பது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

இலங்கையின் தேசிய பிரச்சினைக்குப் பேச்சு மூலம் தீர்வு காண நாம் தயாராகவுள்ளோம். அதற்கான முதற்கட்டமாக மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டுள்ள அனைத்துக் கட்சிகளுடனும் விரைவில் சந்திப்புக்களை மேற்கொள்ளவுள்ளோம். இதில் தமிழ்க் கட்சிகள் அனைத்தும் பங்கேற்க வேண்டும் என நாம் விரும்புகின்றோம்.

கடந்த கால மனக்கசப்பான விடயங்களைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு இருப்பதால் காலம்தான் வீண்விரயமாகும்.

தேசியப் பிரச்சினையை – உள்ளகப் பிரச்சினையை நாம் அனைவரும் ஒன்றுகூடி பேசித் தீர்வைக்காண வேண்டும். இந்தநிலையில், வெளியகத் தலையீடுகள் எதற்கு?

தீர்வில் நாம் நம்பிக்கை வைத்துச் செயற்பட வேண்டும் என்று தமிழ்த் தலைவர்களிடம் கேட்டுக்கொள்கின்றோம் – என்றார்.

## மருத்துவ ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆராய்ச்சியினூடான ஞானம் – Wisdom through Research என்ற தொனிப் பொருளில் நடைபெற்ற இந்த மருத்துவ மாணவர் ஆராய்ச்சி மநாட்டில் பேர்மிங்ஹாம் பல்கலைக்கழகத்தின் பிரயோக சுகாதார ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த சுகாதார தரவு அறிவியல் மற்றும் பொது சுகாதாரப் பேராசிரியர் கிருஸ்ணராஜா நிரந்தரகுமார் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு முதன்மை உரையாற்றினார்.

நிகழ்வில், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் இ.சுரேந்திரகுமாரன், மருத்துவ பீடத்தைச் சேர்ந்த பேராசிரியர்கள், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், மருத்துவ பீட விரிவுரையாளர்கள் மற்றும் மருத்துவ பீடத்தின் 40ஆம், 41ஆம் மற்றும் 42ஆம் அணிகளைச் சேர்ந்த மாணவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

40 ஆம் அணி மருத்துவ மாணவர்களால் சுமார் 30 ஆராய்ச்சிச் சுருக்கங்கள் இந்த ஆய்வு மாநாட்டில் முன்வைக்கப்பட்டன.

நாள்பட்ட நோய்களும், பராமரிப்பும், பெண்கள் – குழந்தைகளுக்கான ஊட்டச் சத்தும், அறிவூட்டலும், பெருந்தொற்றுப் பரவல் அபாயம் ஆகிய மூன்று தலைப்புகளில் ஆராய்ச்சி அமர்வுகள் இடம்பெற்றன.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடம் மற்றும் யாழ். போதனா வைத்தியசாலையைச் சேர்நத நிபுணர்கள் அடங்கிய மதிப்பீட்டுக் குழுவினால் வழங்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட ஆராய்ச்சிச் சுருக்கங்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சட்டமாக்கும் தத்துவம்

மக்களாட்சி அல்லது ஜனநாயகம் என்றால் என்ன? மக்களால், மக்களுக்காக நடைபெறும் அரசாங்கத்தின் ஆட்சி முறைமை என்பது பொதுவான கருத்து. அதனையே 'மக்களால், மக்களுக்காக, மக்களே நடத்தும் ஆட்சி மக்களாட்சி' என்று அமெரிக்க அதிபர் ஆபிரகாம் லிங்கன் வரையறை செய்தார்.

இந்த மக்களாட்சி நடைபெறும் நாடுகளில் அமைதி, சமாதானம், நல்லிணக்கம், மேன்மைத்துவம், இனசௌஜன்யம் போன்றவை பேணப்படுவதற்கு சட்டத்தின் ஆட்சி முக்கியமாகும். சட்டம் சரியாக இருந்தால் – சரியாக நடைமுறைப்படுத்தப்பட்டால் – ஆட்சியும் மேன்மையுறும். தவறான – பிழையான –சட்டங்கள் ஆட்சி முறையையே கெடுத்துக் குட்டிச்சுவராக்கி விடும்.

'பேய் அரசாண்டால் பிணம் தின்னும் சாத்திரங்கள்' – என்று பாஞ்சாலி சபதத்தில் பாரதி கூறுவதும் இதைத்தான்.

ஜனநாயக முறைமையில் சட்டத்தின் ஆட்சிக்கு முக்கியமானது சட்ட உருவாக்கமாகும். அது தனி மனிதர்களிடம் ஒப்படைக்கப்பட்ட தனித்துவமான விடயம் அல்ல.

இலங்கையில் கூட நிறைவேற்று அதிகார ஜனாதிபதி வகைத்தொகையற்ற– வரையறையற்ற – அதிகாரங்கள் பலவற்றைக் கொண்டிருக்கின்றார். ஆனால், அவருக்குக் கூட சட்டவாக்கல் அதிகாரம் வழங்கப்படவில்லை. ஏதேனும் அவசரகால ஒழுங்கு விதிகளை அவர் அவசரம் கருதி அறிவிக்க முடியும். ஆனால் அவற்றுக்குக் கூட குறுகிய காலத்துக்குள், சட்டம் இயற்றும் அதிகாரம் கொண்ட நாடாளுமன்றத்திடம் அவர் தழுவு அங்கீகாரம் பெற வேண்டும்.

அப்படி இருக்கையில் தனி மனிதரான தமக்கு நியதிச்சட்டங்களைஆக்கும்தத்துவம்இருப்பதாகக் கருதி வடக்கு ஆளுநர் செய்யப்பட்டமை மிக மாசமான முன்னுதாரணமாகும். அரசமைப்பு ஏற்பாடுகளின் படி மாகாண நிர்வாக விடயங்களில் நிறைவேற்ற அதிகாரங்களைப் பிரயோகிப்பதற்காக ஜனாதிபதி தமது பிரதிநிதியாக நியமிப்பவரே மாகாணஆளுநர். அதாவது தமது அதிகாரங்களை பிரயோகிக்கும் முகவராகத்தான் ஆளுநரை ஜனாதிபதி நியமிக்கின்றார்.

அந்தப் பின்புலத்தில், தமது அதிகாரங்களைக் கைவளித்து ஆளுநரை நியமிக்கும் ஜனாதிபதிக்கே சட்டம் இயற்றும் அதிகாரம் இல்லாத போது, அவர் நியமித்த ஆளுநருக்கு அந்த அதிகாரம் எப்படி வரும்?

மத்தியில் சட்டம் (act) இயற்றும் அதிகாரம் கொண்டது நாடாளுமன்றம். மாகாணத்தில் நியதிச் சட்டம் (Statute) ஆக்கும் அதிகாரம் மிக்கது மாகாண சபை.

நாடாளுமன்றம் செயலில் இல்லை என்பதற்காக நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி சட்டத்தை ஆக்க முடியாது. அதேபோல மாகாண சபை செயற்பாட்டில் இல்லை என்பதற்காக மாகாண ஆளுநருக்கு நியதிச் சட்டம் இயற்றும் அதிகாரம் வந்து விடாது.

இது புரியாமல் ஆளுநர் பதவியில் நீடிப்பது விந்தைதான்..!

# சீனாவைக் கடுமையாக விமர்சிப்பதற்கு இந்தியாவின் செல்வாக்கு காரணமல்ல!

## சாணக்கியன் திட்டவட்ட அறிவிப்பு



இலங்கை தொடர்பான சீனாவின் பொருளாதார கொள்கைகளை கூட்டமைப்பு விமர்சிப்பதற்கும் இந்தியாவுடன் அந்த கட்சிக்கு உள்ள உறவுகளுக்கும் எந்த தொடர்பும் இல்லை என அந்தக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

சீனா தொடர்பாக அவர் முன்வைத்துள்ள கருத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு இந்தியாவின் ஆதரவுதான் காரணமா என்ற கேள்விக்கு பதிலளிக்கும்போதே சாணக்கியன் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தியா தமிழ் மக்கள் விவகாரத்தில் எப்போதும் அனுதாபத்துடன் உள்ள நிலையில் கூட்டமைப்பின் மீதான இந்தியாவின் செல்வாக்கு தொடர்பான கருத்து இயல்பானதே என்றும் சாணக்கியன் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவா, பிரித்தானியாவா, அல்லது ஆஸ்திரேலியாவா என்று இல்லாமல் நாட்டுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் விடயங்களுக்கு எதிராக தானும் தனது கட்சியும் குரல்கொடுக்கும் என்றும் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

எப்போதும் இந்தியா தமிழ் மக்களுக்கு நண்பனாக இருந்துள்ள போதும், சீனா தமிழ் மக்களின் தேவைகளைக் கருத்தில் கொள்ளவில்லை எனவும் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் நாட்டுக்கு ஏதாவது பாதிப்பை ஏற்படுத்தும் செயற்பாட்டில் இந்தியா ஈடுபட்டால் அவர்களையும் தாம் கண்டிப்போம் என சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

# திருகோணமலையில் கவிதை நூல் வெளியீடு




அமரர் ராஜகிருபன் எழுதிய 'இரவின் எதிரி பூக்கள்' என்ற கவிதை தொகுப்பு நூல் நாளை புதன் கிழமை 7 ஆம் திகதிகாலைதிருகோணமலைவிபுலாணந்தா கல்லூரி மண்டபத்தில் விபுலாணந்தர் இணையகல்விக் கழக தலைவர் றேமன் சோதி ஜெரோம் தலைமையில் நடைபெற உள்ளது.

நூல் அறிமுக உரையை வைத்திய கலாநிதி வர்ணகுலேந்திரனும் நூல் நயவுரையை பைந்தமிழ் சுடர் சிவபாத சுந்தரம் சுதாகரனும் நிகழ்த்துவர். நன்றி உரையை வைத்தியர் சுலோசனா கிருபாகரன் நிகழ்த்துவார்.

# தேசிய திட்டங்களுக்கு செலவிடப்பட்ட பணம் தொடர்பில் தவறான செய்தி பரப்பப்படுகின்றது!

## மைத்திரி கடும் வேதனை



கடந்த அரசாங்கத்தில் தேசிய மட்டத்தில் செயற்படுத்தப்பட்ட திட்டங்களுக்கு செலவிடப்பட்ட பணம் தனது தனிப்பட்ட ஊழியர்களுக்கும் செலவிடப்பட்டதாக கணக்கிட்டு தவறான செய்தி பரப்படுவதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (திங்கட்கிழமை) சிறப்புரிமை பிரச்சினையை எழுப்பி முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதனைத் தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ மற்றும் எனது புகைப் படங்களை வெளியிட்டு ஜனாதிபதியின் ஊழியர்களின் பராமரிப்புக்காக 648 கோடி ரூபா செலவிடப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

வரவு – செலவுத் திட்டத்தில் மஹிந்த ராஜபக்ஷ தனது தனிப்பட்ட ஊழியர்களுக்காக 43 வீதம் மற்றும் மைத்திரிபால சிறிசேன 57 வீதம் நிதியை பயன்படுத்தியுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதியாக இருந்த போது தேசிய அளவிலான 7 திட்டங்களை நடைமுறைப் படுத்தியதாகவும் இதற்காக மற்ற அரச நிறுவனங்களில் இருந்து அதிகாரிகள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தகவல் அறியும் சட்டத்தின்படி வெளியான இந்தத் தகவல் உண்மையாக இருந்தாலும் இந்தத் திட்டங்களுக்காக நியமிக்கப்பட்ட அதிகாரிகளின்சம்பளத்துடன்இந்தத்தொகையையும் காட்டுவது தவறானது என சுட்டிக்காட்டியுள்ளார்.

# திருக்கார்த்திகை விரதத்தை முன்னிட்டு விளக்குகளை கொள்வனவு செய்கின்றமையில் இந்துக்கள் ஆர்வம்!

திருக்கார்த்திகை விரதத்தை முன்னிட்டு சந்தையில் விளக்குகளை கொள்வனவு செய்வதில் மக்கள் ஆர்வம் காட்டிவருகின்றனர்.

நேற்று (திங்கட்கிழமை), இன்று (செவ்வாய்க் கிழமை) யாழ். மாவட்டத்தில் உள்ள சந்தை வியாபார நிலையங்களில் விளக்குகளைக் கொள்வனவு செய்வதில் மக்கள் ஆர்வத்துடன் ஈடுபட்டிருந்தனர்.

இதேவேளை, யாழ். நல்லூர் திருநெல்வேலி வியாபார சந்தைப்பகுதியிலும் விற்பனை மும்முரமாக இடம்பெற்றிருந்தது.

இதன்படி நாளை (புதன்கிழமை) வீடுகளில் திருக்கார்த்திகை திருநாள் இடம்பெற உள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ஐந்நூறுக்கும் அதிகமானோர் ஈரானில் இவ்வாண்டு தூக்கு!




தெஹ்ரான், டிச.06

ஈரான் அரசாங்கம் நடப்பாண்டில் (2022இல்) ஐந்நூறுக்கும் மேற்பட்டவர்களை தூக்கிலிட்டுள்ளது என்று ஓர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையின் பிரகாரம் இந்த ஆண்டு ஈரானில் இதுவரை குறைந்தது 504 பேர் தூக்கிலிடப்பட்டுள்ளனர் என்று நோர்வேயை தளமாகக் கொண்ட ஈரான் மனித உரிமைகள் குழு தெரிவித்துள்ளது.

அவர்களில் நால்வருக்கு அண்மையில் இஸ்ரேலுக்கு உளவு பார்த்ததாக ஈரான் அரசாங்கம் தூக்குதண்டனை நிறைவேற்றியுள்ளது. இதன் பின்னரே கடந்த 5 ஆண்டுகளில் இல்லாத அதிகபட்ச எண்ணிக்கை அளவுள்ளோர் தூக்கிலிடப்பட்டுள்ளனர் என்று சொல்லப்படுகிறது. முன்னதாக 2021இல், குறைந்தது 333 பேர் தூக்கிலிடப்பட்டிருந்த னர். இந்த நிலையில், நியாயமான விசாரணை இல்லாமல் இந்த நபர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது என்று மனித உரிமைகள் குழு இயக்குனர் மஹ்மூத் அமிரி–மொகத்தம் கூறியுள்ளார். மரணதண்டனைகள் மூலம் சமூகத்தில் அச்சத்தை உருவாக்க வேண்டும் என்னும் நோக்கத்திலும், அரசின் உளவுத் துறை தோல்விகளில் இருந்து பொதுமக்களின் கவனத்தை திசை திருப்பும் நோக்கத்திலும் இந்த மரணதண்டனைகள் இருந்தன என்று மஹ்மூத் அமிரி–மொகத்தம் கூறியுள்ளார்.

## கனடாவில் சீக்கியப் பெண் வீதியில் சுட்டுப் படுகொலை



ஒன்டாரியோ, டிச.06

கனடாவில் ஒன்டாரியோ மாகாணத்தில் மிஸ்சிசாவ்கா நகரில் பவன்பிரீத் கவுர் என்ற 21 வயது சீக்கிய இளம்பெண் மீது மர்ம நபர் ஒருவர் துப்பாக்கி சூடு நடத்தி உள்ளார். இந்த சம்பவத்தில் கவுர் பலத்த காயமடைந்தார். இதுபற்றி தகவல் அறிந்து சம்பவ பகுதிக்கு பொலிஸார் சென்றுள்ளனர்.

பிராம்ப்டன் பகுதியை சேர்ந்த அவரை படுகாயங்களுடன் கண்ட பொலிஸார், உயிர் காக்கும் சிகிச்சைகளை அளித்து உள்ளனர். எனினும், அதில் பலனின்றி அவர் உயிரிழந்து விட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது திட்டமிட்ட படுகொலை என பொலிஸார் சந்தேகிக்கின்ற நிலையில், இதுபற்றி பொலிஸ் உயரதிகாரி டிம் நக்தேகால் கூறும்போது, சம்பவ பகுதியில் இருந்து முழுவதும் கருப்பு உடையுடன் ஒருவர் தப்பிச் சென்றுள்ளார். அதனால், அவர் ஆணா, பெண்ணா எனத் தெரியவில்லை எனக் குறிப்பிட்டார்.

கடந்த சில நாள்களுக்கு முன் இந்திய வம்சாவளியான 18 வயது கொண்ட மேஹக்பிரீத் சேத்தி என்பவரை உயர்நிலை பள்ளி ஒன்றில் வாகன நிறுத்துமிடத்தில் வைத்து குத்திப் படுகொலை செய்யப்பட்ட நிலையில், இந்த அதிர்ச்சிச் சம்பவம் நடந்து உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அமெ. விமானம் வெனிஸ் அருகே கடலில் விழுந்து நொறுங்கியது!

### 2 பெண் பயணிகள் பலி; விமானி மாயம்

வாஷிங்டன், டிச.06

அமெரிக்காவின் புளோரிடா மாகாணம் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகரில் உள்ள விமான நிலையத்தில் இருந்து தனியாருக்குச் சொந்தமான சிறிய விமானம் புறப்பட்டு புளோரிடாவின் வெனிஸ் நகரை நோக்கிச் சென்றது. இந்த விமானத்தில் ஆண் விமானி ஒருவரும், 2 பெண் பயணிகளும் இருந்துள்ளனர்.

இந்த விமானம் வெனிஸ் நகரை நெருங்கியபோது திடீரென மாயமானது. இதையடுத்து விமானத்தைத் தேடும் பணிகள் முடுக்கிவிடப்பட்டன. இதற்கிடையில் வெனிஸ் நகருக்கு அருகே கடலில் சென்றுகொண்டிருந்த படகோட்டிகள் சிலர்

கடலில் ஒரு பெண்ணின் சடலம் மிதப்பதைக் கண்டடுள்ளனர். இது குறித்து அவர்கள் அளித்த தகவலினடிப்படையில் நீச்சல் வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று பெண்ணின் சடலத்தை மீட்டனர்.

பின்னர் அந்த பகுதியில் நடத்தப்பட்ட தேடுதல் வேட்டையில் மாயமான விமானத்தின் சிதைவுகள் கடலில் கண்டெடுக்கப்பட்டன. அந்த இடத்தில் இருந்து மேலும் ஒரு பெண் சடலமாக மீட்கப்பட்டார். இதை தொடர்ந்து, மாயமான அந்த விமானம் கடலில் விழுந்து நொறுங்கியதும், இதில் பெண் பயணிகள் இருவரும் பலியானமையும் தெரியவந்தது. இந்த விபத்தில் விமானி மாயமாகியுள்ள நிலையில் அவரின் கதி என்ன என்பது தெரியவில்லை என்றும் அவரை தேடும் பணிகள்வ்தொடர்ந்து நடந்து வருகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## கொலம்பியாவில் பெரும் நிலச்சரிவு 3 சிறுவர்கள் உள்பட 27 பேர் சாவு!









பகோடா, டிச.06

கொலம்பியாவில் ஈற்பட்ட திடீர் நிலச்சரிவில் சிக்கி 3 சிறுவர்கள் உள்பட 27 பேர் பலியாகி உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. தென்னமெரிக்கா நாடான கொலாம்பியாவில் உள்ள பியூப்லோ ரிகோ பகுதியில் கடந்த சில நாளகளாகப் பெய்து வரும் கனமழை காரணமாக அப்பகுதியில் உள்ள நதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

இதனால், நதிகளின் ஓரம் உள்ள பொதுமக்கள் வசிப்பிடங்களில் நேற்று கடும் நிலச்சரிவு ஏற்பட்டது. இந்த நிலச்சரிவில் சிக்கி சுமார் 27 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தகவல்கள் வெளியாகின். மேலும், பலர் மண் சரிவில் சிக்கிப் புதையுண்டு போயுள்ளனர் எனவும், அவர்களை மீட்கும் பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர் எனவும் அந்நாட்டு அரசு தெரிவித்தது.

இதுதொடர்பாக அந்நாட்டு அதிபர் கூறுகையில், நிலச்சரிவில் சிக்கி 3 சிறுவர்கள் உள்பட 27 பேர் பலியாகி உள்ளனர் எனவும், தொடர்ந்து அங்கு மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன எனவும் தெரிவித்துள்ளார்.

## ஜப்பானில் பறவைக் காய்ச்சலின் எதிரொலி மூன்று லட்சம் கோழிகளை அழிக்க முடிவு!

ஜப்பானின் ஆய்ச்சி மாகாணத்தில் உள்ள ஒரு கோழிப்பண்ணையில் வழக்கத்துக்கு மாறாக அதிக எண்ணிக்கையில் கோழிகள் இறந்துள்ளமையைத் தொடர்ந்து இறந்துபோன கோழிகளைப் பரிசோதித்ததில் அவற்றில் பெரும்பாலானவை பறவைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு இறந்ததுள்ளமை தெரியவந்தது. இந்தச் சம்பவம் அங்கு பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆய்ச்சி மாகாணத்தில் 11 ஆண்டுகளுக்கு பிறகு தற்போது பறவைக் காய்ச்சல் ஏற்பட்டுள்ளதாக உள்ளூர் அதிகாரிகள் கூறுகின்றனர். பறவை காய்ச்சல் மேலும்வ்பரவுவதைத் தடுக்கும் விதமாக மாகாணம் முழுவதிலும் சுமார் 3 லட்சத்து 10 ஆயிரம் கோழிகளை அழிக்க அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர் என்றும், அதற்கான பணிகளைத் தொடங்கியுள்ளனள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதே போல் கோஹிமா மாகாணத்திலும் பறவை காய்ச்சல் காரணமாக 34 ஆயிரம் கோழிகள் அழிக்கப்பட்டனசெனத் தகவல்கள் வெளியாகி உள்ளன. ஜப்பானில் கடந்த ஒக்டோபர் மாத இறுதியில் இருந்து பறவை காய்ச்சல் பரவி வருவதும் இதுவரை 33 லட்சம் கோழிகள் அழிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



# உணவுப் பாதுகாப்பு அதிகாரியாக நடித்து பணம் வசூல் செய்த இருவர் கைது..!!




மும்பை, டிச.06

மும்பையில் உணவுப் பாதுகாப்பு அதிகாரிகளாக வேடமணிந்து ஹோட்டல் உரிமையாளர்களை ஏமாற்றிய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். குற்றம் சாட்டப்பட்ட இருவரும் புறநகர் போரிவலியில் உள்ள ஒரு ஹோட்டலில் உணவுப் பாதுகாப்பு அதிகாரிகளாக மாறுவேடத்தில் நுழைந்து அதன் உரிமையாளரிடம் இருந்து ரூ. 5,000 வசூலித்துள்ளனர். இருப்பினும், ஹோட்டல் மேலாளர், அவர்களின் நடவடிக்கையில் சந்தேகமடைந்துள்ளார்.

இதுகுறித்து உடனடியாக பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்திருந்தார். தகவலின் பேரில் விரைந்து வந்த பொலிஸார், விசாரித்ததில், இருவரும் போலியாக வேடமணிந்து குற்ற செயலில் ஈடுபட்டமை தெரியவந்தது. இதையடுத்து இருவரையும் கைது செய்த பொலிஸார், இருவரிடமிருந்தும் போலி அடையாள அட்டைகள், ஒரு கார் மற்றும் பிற பொருட்களைக் கைப்பற்றியுள்ளனர். மேலும் இது குறித்துப் பொலிஸார் விசாரித்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

## குளிர்கால கூட்டத் தொடர் நாளை இந்திய நாடாளுமன்றத்தில் ஆரம்பம்



புதுடெல்லி, டிச.06

இந்திய நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர், வழக்கமாக நவம்பர் மாதம் தொடங்குகின்ற நிலையில், இந்த ஆண்டு சற்று தாமதமாக டிசம்பர் மாதம் தொடங்குகிறது. நாளை (புதன்கிழமை) அந்தச் குளிர்கால கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ளது. டிசம்பர் 29 ஆம் திகதி வரை இத்தொடர் நடக்கிறது. மொத்தம் 17 அமர்வுகள் நடைபெறும். இந்த தொடரில் தாக்கல் செய்யப்பட உள்ள 16 மசோதாக்களை மத்திய அரசு பட்டியலிட்டுள்ளது.

இதற்கிடையே, கூட்டத்தொடர் குறித்து விவாதிக்க மத்திய அரசு இன்று (செவ்வாய்க்கிழமை) அனைத்து கட்சி கூட்டத்துக்கு ஏற்பாடு செய்துள்ளது. இரு அவைகளின் அரசியல் கட்சி குழு தலைவர்களுக்கு நாடாளுமன்ற விவகார மந்திரி பிரகலாத் ஜோஷி அழைப்பு விடுத்துள்ளார். இந்த கூட்டத்தில், பிரதமர் மோடியும் கலந்து கொள்கிறார்.

தாக்கல் செய்யப்பட வேண்டிய மசோதாக்கள், விவாதிக்கப்பட வேண்டிய பிரச்சினைகள் ஆகியவை குறித்து கூட்டத்தில் ஆலோசனை நடத்தப்படவுள்ளதுடன், நாடாளுமன்ற சபாநாயகர் ஓம்பிர்லா, இன்று மாலை, அலுவல் ஆய்வுக்குழுக் கூட்டத்தை நடத்துகிறார். எந்தெந்தப் பிரச்சினைகள் மீது விவாதம் நடத்துவது என்று இதில் ஆலோசனை நடத்தப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஜேர்மன் வெளியுறவு அமைச்சரை சந்தித்துப் பேசினார் ஜெய்சங்கர்



புதுடெல்லி, டிச.06

ஜேர்மன் நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் அன்னலேனா பேயர்பாக், 2 நாள் பயணமாக நேற்று டெல்லிக்கு வந்திருந்தார். அவருடன், மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

எரிசக்தி, வர்த்தகம், பருவநிலை மாற்றம் ஆகிய துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கான வழிமுறைகள் குறித்து இருவரும் ஆலோசனை நடத்தியுள்ளனர். பின்னர், அன்னலேனா பேயர்பாக் வெளியிட்ட அறிக்கையில், "இந்தியா, ஜெர்மனியின் இயற்கையான கூட்டாளி. 21 ஆம் நூற்றாண்டில் சர்வதேச நாடுகள் தரவரிசையை வடிவமைப்பதில், இந்தியா உறுதியான செல்வாக்கை கொண்டிருக்கும்" என்று கூறியுள்ளார்.

## கட்டாய மதமாற்றம் அரசமைப்புக்கு எதிர்

### உச்ச நீதிமன்றம் தெரிவிப்பு




புதுடெல்லி, டிச.06

கட்டாயமதமாற்றம் அரசமைப்புச் சாசனத்திற்கு எதிரானது என இந்திய உச்சநீதிமன்றம் கருத்துத் தெரிவித்துள்ளது. பணம், பரிசுப்பொருள்களைக் கொடுத்துச் செய்யும் மதமாற்றம் அடிப்படை உரிமைகளுக்கு எதிரானது என்று அறிவிக்கக்கோரி பா.ஜ.க.வை சேர்ந்த அஸ்வினி உபாத்தியாயா உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவை நீதிபதி எம்.ஆர். தலைமையிலான அமர்வு விசாரித்து வருகிறது. இதில் நேற்று நடைபெற்ற விசாரணையின் போது மத்திய அரசின் சார்பில் சொலிசிட்டர் ஜெனரல் துார் மேத்தா ஆஜராகி, 'பணம், பரிசுப் பொருள்களை வழங்கிச் செய்யும் மதமாற்றம் தொடர்பாக மாநில அரசுகளிடம் இருந்து தகவல்களைத் திரட்டி வருகிறோம். எனவே விரிவான பிரமாண பத்திரம் தாக்கல் செய்ய ஒரு வாரம் அவகாசம் வேண்டும்' என கோரினார்.

அப்போது நீதிபதிகள், 'பணம், பரிசுப்பொருள்கள் உள்ளிட்டவற்றை அளித்து செய்யும் மதமாற்றம் மிகவும் ஆபத்தானது. அரசமைப்பு சாசனத்தின் அடிப்படைக்கு எதிரானது' என்று தெரிவித்தனர்.

மேலும் இது தொடர்பாக மாநிலங்களிடம் இருந்து விரிவான தகவல் பெற்று பிரமாண பத்திரம் தாக்கல் செய்ய மத்திய அரசுக்கு அவகாசம் அளித்து விசாரணையை வருகிற 12ஆம் திகதிக்கு நீதிபதிகள் தள்ளிவைத்தனர்.

## இரு ஆண்டுகளின் பின்பு மீண்டும் திருவண்ணாமலையில் மகாதீபம்!

### மக்கள் பெரும் எண்ணிக்கையில் குவிகின்றனர்



திருவண்ணாமலை, டிச.06

திருவண்ணாமலை அருணாசேலேஸ்வரர் கோவிலில் நடைபெற்று வரும் கார்த்திகை தீபத் திருவிழாவின் சிகர நிகழ்ச்சியாக இன்று (செவ்வாய்க்கிழமை) கோவில் பின்புறம் உள்ள 2,668 அடி உயர மலை உச்சியில் மகாதீபம் ஏற்றப்படுகிறது.

இதையொட்டி மகாதீபம் ஏற்றப்படும் கொப்பரையை நேற்று காலை பக்தர்கள் மலை உச்சிக்குக் கொண்டு சென்றனர்.

கடந்த இரு ஆண்டுகளுக்கு பிறகு கொரோனா கட்டுப்பாடுகள் தளர்வு செய்யப்பட்டுள்ளமையால் மகாதீபத்தை காண லட்சக்கணக்கான பக்தர்கள் சிறப்பு பஸ்கள் மற்றும் ரெயில்கள் மூலம் திருவண்ணாமலைக்கு வந்து குவிந்து வருகின்றனர். இந்தநிலையில், இன்று பாபர் மசூதி இடிப்பு தினம் என்பதால் திருவண்ணாமலை நகரம் பொலிஸாரின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை நகருக்கு வரும் 9 இணைப்பு சாலைகளிலும் சோதனை சாவடிகள் அமைத்து உரிய சோதனைக்கு பின்னரே வாகனங்களை பொலிஸார் நகருக்குள் அனுமதித்து வருகின்றனர். தீபத் திருவிழாவை முன்னிட்டு திருவண்ணாமலை நகரம் மற்றும் கோவிலை சுற்றி 12 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

அனைத்து பகுதிகளிலும் பொலிஸார் தடைகளை அமைத்து பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். கண்காணிப்பு பணி கிரிவலப்பாதையிலும் தொடர்ந்து பொலிஸார் ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளனர். கண்காணிப்பு கோபுரங்கள் அமைக்கப்பட்டு பொலிஸார் கண்காணிப்பு பணியிலும் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# இலங்கையில் நாவலர் ஆண்டு செயற்றிட்டம் விபுலானந்த அடிகளின் காரைதீவில் ஆரம்பம்





(காரைதீவுச் செய்தியாளர்)

இலங்கை அரசினால் பிரகடனப்படுத்தப்பட்ட நல்லைநகர் ஆறுமுக நாவலர் பெருமான் ஆண்டின் செயற்திட்டங்கள் இலங்கையில் முதன்முதலாக விபு லானந்த அடிகள் பிறந்த காரைதீவில் முன்னெடுக்கப்பட்டன.

இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம் அடுத்த ஆண்டை (2023) நாவலர் ஆண்டாக ஜனாதிபதி முன்னிலையில் பிரகடனப்படுத்தி இருந்தது .

அந்த நாவலர் ஆண்டின் 17 செயற்றிட்டங்களில் ஒன்றான வீதி ஒன்றிற்கு நாவலர் வீதி எனப் பெயர் சூட்ட காரைதீவு பிரதேச சபை நேற்று முன்தினம் சபை அமர்வில் தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றது.

வடக்கில் நல்லூரில் பிறந்த நாவலர் பெருமானுக்கு இலங்கையில் முதன்முதலாக கிழக்கில் காரைதீவில் பிறந்த விபுலானந்த அடிகளாரின் கோட்டையில் முதல் கௌரவம் வழங்கப்பட்டிருக்கிறது. அந்த நிகழ்வு காரைதீவு பிரதேச சபையில் நேற்று முன்தினம் சம்பிரதாய பூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. அங்கு நாவலர் ஆண்டை முன்னெடுக்க பிரகடனம் செய்யப்பட்டது.

காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில், காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன் முன்னிலையில், ஆன்மீக ஆர்வலர் உதவிக்கல்விப்பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா முன்மொழிந்து நாவலர் ஆண்டு பிரகடனம் செய்யப்பட்டது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட உத்தியோகத்தர் கு.ஜெயராஜியின் ஏற்பாட்டில் இடம் பெற்ற இந்த பிரகடன நிகழ்வில், உத்தியோக பூர்வமாக நாவலர் பெருமானின் திருவுருவப்படம் தவிசாளரிடம் கையளிக்கப்பட்டது.

மேலும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் வெளியிட்ட நாவலர் பெருமானின் நூல்கள் அங்கு தவிசாளர், சபை உறுப்பினர்கள், அதிபர், ஆசிரியர், மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

இதன் போது பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன் உரையாற்றுகையில்.. இலங்கையில் முதல் முதலாக காரைதீவு பிரதேசத்தில் நாவலர் ஆண்டு முன்னெடுக்கப்படுவது பெருமைக்குரியது. இந்த சபையிலே அத்தகைய தீர்மானத்தை முன்னெடுத்து இருப்பது வரலாற்று பெருமைக்குரியது என்று தெரிவித்தார். காரைதீவு பிரதேச இந்துசமய கலாச்சார உத்தியோகத்தர் திருமதி சிவலோஜினியும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்.

## வைத்தியசாலைகளில் மருந்து தட்டுப்பாடு ஆட்சேபித்து நிலாவெளியில் ஆர்ப்பாட்டம்







(ஹஸ்பர்)

வடக்கு – கிழக்கு வைத்தியசாலைகளில் நிலவும் மருந்து தட்டுப்பாடு மற்றும் மருத்துவ சாதனங்களின் குறைபாடுகளை நிவர்த்தி செய்து தருமாறு கோரி இன்று காலை 9.30 மணியளவில் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நிலாவெளி இக்பால் நகர் பகுதியில் இடம் பெற்றது.

இக்பால் நகர் மைதானத்தில் ஆரம்பித்த ஊர்வலம் திருகோணமலை – புல்மோட்டை பிரதான வீதி ஊடாகச் சென்று மீண்டும் மைதானத்தை வந்தடைந்தது.

இந்த ஆர்ப்பாட்டம் வடக்கு – கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் பெண்கள் அமைப்புக்களி னால் ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் பெண்கள் அமைப்புக்களின் உறுப்பினர்கள், சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், இளைஞர்கள் உட்பட சுமார் 150க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் 'எமது வாழ்க்கை – எமது உரிமை', 'சுகாதார உரிமைகள் – மனித உரிமைகள்', 'பெண்களின் சுகாதார உரிமைகளை உறுதி செய்!', 'நமது வாழ்க்கை–நமது உரிமை!' முதலான வாசகங்களை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதே வேளை ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பதற்கான மஹஜர் ஒன்றையும் முன்னளிப்பு செய்தனர். வடக்கு கிழக்கு பிரதேசங்களில் உள்ள மக்கள் தங்களுக்கு ஏற்படும் சாதாரண நோய்த் தாக்கம் தொடக்கம் பாரிய சத்திர சிகிச்சை வரையான சிகிச்சைக்காக வைத்தியசாலைகளுக்கு செல்வதே அவர்களது உரிமையாகும். குறிப்பாக மக்கள் வைத்தியசாலைகளுக்கு செல்கின்ற போது குறிப்பிட்ட அளவு அத்தியவசிய மருந்துப் பொருள்களே வைத்தியசாலைகளில் வழங்கப்படுகின்றன. ஏனைய மருந்துப் பொருள்களை தனியார் வைத்தியசாலைகளிலோ அல்லது தனியார் மருந்தகங்களிலோ பணம் செலுத்திப் பெற வேண்டிய சூழ் நிலைகளுக்குத் தள்ளப்பட்டிருக்கின்றோம். அது மாத்திரமன்றி நாய்,பூனை மற்றும் பாம்பு தீண்டுதல்களுக்கான மருந்துகள் கிடைக்கப்பெறுவது குறைவாகவே காணப்படுகின்றது" – போராட்டத்தில் ஈடுபட்டோர் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

## வலம்புரிச் சங்குடன் நேற்றிரவு ஆரையம்பதியில் ஒருவர் கைது




(பாறுக் ஷிஹான்)

வலம்புரிசங்குஒன்றைத் தம்வசம் வைத்திருந்த சந்தேக நபரை கல்முனை விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை விசேட அதிரடிப்படை முகாமிற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றினை அடுத்து நேற்றுத் திங்கட்கிழமை இரவு மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆரையம்பதி 3ஆம் பிரிவில் வைத்து சந்தேக நபர் விசேட அதிரடிப் படையினர் மேற் கொண்ட தேடுதலில் கைதானார்.

இவ்வாறு கைதான நபர் ஆரையம்பதியை பகுதியை சேர்ந்த 42 வயது மதிக்கத்தக்கவர் என்பதுடன், சந்தேக நபர் வசம் இருந்து பல மில்லியன் ரூபா பெறுதியான வலம்புரி சங்கு ஒன்று மறைத்து வைக்கப்பட்ட நிலையில் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

பின்னர் கைது செய்யப்பட்ட நபர் சான்று பொருளுடன் காத்தான்குடி பொலிஸாரிடம் நீதி மன்ற நடவடிக்கைக்காகப் பாரப்பட்டார். விசேட அதிரடிப்படையினர் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளனர்.

# சிறுதொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருள்களை ஊக்குவிக்கும் நோக்கில் முல்லைத்தீவில் கலந்துரையாடல்!



சிறுதொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருள்களை ஊக்குவிக்கும் நோக்கிலான கலந்துரையாடல் நேற்று (திங்கட்கிழமை) முற்பகல் 11 மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட செயலக அரியாத்தை மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட கைத்தொழில் அபிவிருத்தி சபையின் உதவிப் பணிப்பாளர் பு.ரமணன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் கலந்து சிறப்பித்தார்.

யுஎஸ்எயிட் நிறுவனத்தின் நிதி அனுசரணையில், சமூக ஒத்திசைவு மற்றும் நல்லிணக்க செயற்பாடு திட்டத்தின் கீழ் ஐக்கிய இலங்கை நடவடிக்கை நிறுவனத்தின் ஏற்பாட்டில் 'பொருளாதார நெருக்கடிக்கான பதிலளிப்பு நடவடிக்கைகள் – சிறுதொழில் முயற்சியாளர்களுக்கான ஊக்குவிப்பு' திட்டமாக இது அமைந்துள்ளது.

மேற்படி கலந்துரையாடல் உள்ளூர் உற்பத்தி முயற்சியாளர்களைத் தெரிவுசெய்து அவர்களுக்கான உற்பத்திப் பொருள்களை ஊக்குவிக்கும் நோக்கில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியான நிலையில் மாவட்டத்தில் தொழில் முயற்சியில் ஈடுபட்டுள்ள தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு, விதாதா வள நிலையம், தொழில்துறை திணைக்களம், கைத்தொழில் அபிவிருத்தி சபை ஆகியன முன்னெடுக்கப்பட்டுள்ள நிகழ்ச்சி திட்டங்களில் பங்குபற்றிய, இந்தத் திட்டத்தில் பயனடைந்த தெரிவு செய்யப்பட முயற்சியாளர்கள் கலந்துகொண்டனர்.

மேலும் இதன்போது கலந்துகொண்ட நடுத்தர மற்றும் சிறு தொழில் முயற்சியாளர்களது தற்போதைய தொழில் அடைவுகள் மற்றும் மேம்படுத்தப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் துறைசார்ந்தவர்களுடன் கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் எட்டப்பட்டன.

மேற்படி கலந்துரையாடலில் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்(நிர்வாகம்) க.கனகேஸ்வரன், ஐக்கிய இலங்கை நடவடிக்கை பிரதம நிறைவேற்று அதிகாரி சு.தவசீலன், ஐக்கிய இலங்கை நடவடிக்கை நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்கள், சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு, விதாதா வள நிலையம், தொழில்துறை திணைக்களம், கைத்தொழில் அபிவிருத்தி சபை உத்தியோகத்தர்கள், மக்கள் வங்கி முகாமையாளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் மாவட்ட இணைப்பாளர், பனை அபிவிருத்தி சபை உத்தியோகத்தர்கள் மற்றும் உள்ளூர்உற்பத்தியாளர்கள்எனப்பலரும்கலந்துகொண்டனர்.

## க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கான விடைத்தாள் மதிப்பீட்டு விண்ணப்பங்கள் 10 ஆம் திகதி நிறைவு

உயர்தர பரீட்சைக்கான விடைத்தாள் மதிப்பீட்டு விண்ணப்பங்கள் தொடர்பில் விண்ணப் பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையகம் அறிவிப்பு ஒன்றை வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி மதிப்பீட்டு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் டிசெம்பர் 10 ஆம் திகதியுடன் நிறைவு பெறவுள்ளதாக தெரிவித்துள்ளது. இதற்கமைய விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகளில் பங்கேற்போர் மேற்படி 10 ஆம் திகதிக்கு முன்னதாக இணைய வழி ஊடாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறும் கேட்டுகொள்ளப்பட்டுள்ளது.

## பயிரிக்கூடல் முருகன் ஆலயத்தின் நந்தி பலிபீடம் விசமிகளால் உடைப்பு



பயிரிக்கூடல் முருகன் ஆலய பலிபீடம் நேற்றுமுன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) நள்ளிரவு இனந்தெரியாத விசமிகளால் உடைக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் ஆலய பூசகரால் ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதை தொடர்ந்து ஊர்காவற்துறை பொலிஸாரால் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## கிளிநொச்சியில் பாடசாலையில் மின் உபகரணங்கள் திருட்டு!

பாடசாலையில் பொருத்தப்பட்டிருந்த மின் உபகரணங்கள் திருடப்பட்ட சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரமந்தனாறு மகாவித்தியாலயத்தில் கடந்த முதலாம் திகதி புதிய கட்டடத் தொகுதி ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

மேற்படி கட்டடத்தில் பொருத்தப்பட்டிருந்தமின்இணைப்புக்கள், இரண்டு மின் விசிறிகளும் திருடப்பட்டுள்ளன என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

படத்துக்குரிய திறப்புகள் கதவின் கோர்வையாக கதவிலே தொங்கவிடப்பட்டிருந்த நிலையில், அதிலிருந்து திருடப்பட்ட இரண்டு சாவிகளைக் கொண்டே திறந்து திருடப்பட்டுள்ளது.

சுமார் நான்கு லட்சம் ரூபா பெறுமதியான மின் இணைப்புகள் பொருத்தப்பட்டிருந்த நிலையில், இவ்வாறு திருடப்பட்டுள்ளது.

கடந்த மூன்று நாள்கள் பாடசாலைகள் விடுமுறை தினமாகையால், நேற்றைய தினமே கற்றல் செயல்பாடுகள் ஆரம்



## உள்நாட்டு பால் உற்பத்தியை அதிகரிக்க இந்தியாவிடமிருந்து தொழில்நுட்ப உதவி!

இறக்குமதி செய்யப்படும் பால்மாவில் தங்கியிருப்பதைத் தவிர்க்கும் வகையில் உள்ளூர் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கு அவசியமான குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால திட்டத்தை தயாரிக்க தேர்மனைக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்திய தேசிய கால்நடை அபிவி ருத்தி சபையின் பல்துறை குழுவுடன் இணைந்து செயற்படுவதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, உள்நாட்டின் அரச மற்றும் தனியார் துறை பிரதிநிதிகள் அடங்கிய குழுவொன்றை நியமித்துள் ளார்.

அது தொடர்பில், இந்திய தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையும் இந்தியாவின் அமுல் பால் நிறுவனமும் இணைந்து இந்நாட்டில் திரவப் பால் உற்பத்திக்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கான ஆரம்பக்கட்டப் பேச்சு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தலைமையில் நேற்று (திங்கட்கிழமை) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

குறுகிய மற்றும் நடுத்தர காலத் திட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம் உள்ளூர் பால் உற்பத்தியை இரட்டிப்பாக்குவது தொடர்பாக இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், நீண்டகால திட்டத்தினூடாக இலங்கையை பாலில் தன்னிறைவடையச் செய்வதே இதன் நோக்கம் என்றும் இங்கு குறிப்பிடப்பட்டது.

## திருநெல்வேலி பகுதியில் 'பிக்பொஸ்' அப்பக்கடை!




யாழ்ப்பாணம் – திருநெல்வேலி பகுதியில் 'பிக்பொஸ்' எனும் பெயரில் சிறிய தள்ளுவண்டி கடை ஒன்று நேற்று (திங்கட்கிழமை) திறக்கப்பட்டது.

இந்தக் கடையின் பெயரானது இந்தியாவின் பிரபல தொலைக்காட்சி ஒன்றில் உலகநாயகன் கமல்ஹாசன் தொகுத்து வழங்கும் நிகழ்ச்சியின் பெயராக இருப்பதால் திறந்த அன்றே கடை பிரபல்யம் அடைந்துள்ளது.

இதனால், கடையில் மக்கள் பலர் வந்து அப்பம் சாப்பிடுவதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

## இளைஞர் ஒருவர்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த இளைஞருக்கும் மற்றொரு வருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த் தர்க்கம், கைகலப்பாக மாறியதில் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த குறித்த நபர் களுபோவில வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றிரவு உயிரிழந்துள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தெஹிவளை – அபோன்சு மாவத்தையில் வசித்து வந்த 18 வயதுடைய இளைஞரேஇவ்வாறுஉயிரிழந்துள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய 44 வயதுடைய சந்தேகநபர் தற்போது தலைமறைவாகியுள்ள நிலையில், அவரைக் கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளைத் தெஹிவளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## கட்டணம்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதில் அரைவாசிக் கட்டணமே மின்சாரப் பாவனையாளர்களிடம் இருந்து அறிவிடப்படுகின்றது.

எனவே, இந்த நட்டத்தை ஈடுசெய்ய முடியாதுபோனால், எதிர்காலத்தில் மின்சார உற்பத்தியை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்படும்.

இதன் காரணமாக அடுத்தவருடத்தில் 6 மணித்தியாலங்கள் வரையில் மின்சார விநியோகத் தடையை மேற்கொள்ள வேண்டியேற்படும்.

இதற்குப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, எதிர்ப்பை வெளியிட்டு வருகின்ற போதும், அமைச்சரவை இதற்கு உடன்பாடு தெரிவித்துள்ளது.

அதேநேரம் சட்டமா அதிபரும் தமது ஒப்புதலை வழங்கியுள்ளார் – என்றார்.

## 31 அரசியல்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பாதீட்டு ஒதுக்கம் குறித்த குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

2015ஆம் ஆண்டு காலப்பகுதியில் சுமார் 400 அரசியல் கைதிகள் இருந்தனர். பின்னர் அந்த எண்ணிக்கை 110 ஆகக் குறைக்கப்பட்டது.

அவர்கள் தொடர்பான வழக்குகளை விரைவில் நிறைவு செய்வதற்காக கொழும்பு மற்றும் அநுராதபுரம் ஆகிய பகுதிகளில் இரண்டு விசேட மேல் நிதிமன்றங்கள் ஸ்தாபிக்கப்பட்டன.

இதையடுத்து குறித்த எண்ணிக்கை 60ஆகக் குறைந்தது.

இந்தநிலையில், தற்போது 16 குற்றவாளிகளும் 15 சந்தேகநபர்களும் உள்ளனர். குறித்த வழக்குகளை விரைவில் நிறைவு செய்யுமாறு பிரதம நீதியரசரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது – என்றார்.

இதேவேளை, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சமர்ப்பித்த கடிதத்தை நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவிடம் வழங்குவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன தெரிவித்தார்.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் கேள்வி எழுப்பிய அவர், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுக்கு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்ட நட்டஈடு தொகை தொடர்பிலும் சுட்டிக்காட்டினார்.

## 'மே 9'......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விமல் வீரவன்ச எம்.பி. வலியுறுத்தினார்.

இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று கருத்து வெளியிடும் போது அவர் மேலும் கூறியதாவது:–

கடந்த மே 09 ஆம் திகதி நாட்டில் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க அப்போதைய ஜனாதிபதி கோட்டபய ராஜபக்சவால் ஐவர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டது.

தற்போதைய ஜனாதிபதியிடம் மேற்படி குழுவினர் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர் என்று அறியமுடிகின்றது. இருப்பினும்அறிக்கையின்உள்ளடக்கம் இதுவரை பகிரங்கப்படுத்தப்படவில்லை

நாட்டு மக்களின் வரிப்பணத்தின் ஊடாக இந்தக் குழுவின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. அந்த அறிக்கையின் உண்மைத்தன்மையை அறிந்துகொள்ளும் உரிமை நாட்டு மக்களுக்கு உண்டு. ஆகவே, அதை நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்க வேண்டும் – என்றார்.

இதற்குப் பதிலளித்த சபை முதல்வர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த,

குழுக்களை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. குழுவினர் ஜனாதிபதியிடம் அறிக்கை சமர்ப்பிப்பார்கள்.

தற்போதைய ஜனாதிபதியிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா என்பதை அறியவில்லை. இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்தப்படும் – என்று குறிப்பிட்டார்.

## வடக்கு மாகாண......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விசாரணை அறிக்கை இன்னமும் சமர்ப்பிக்கப்படவில்லை.

மேலும், மூன்றாம் தவணை ஆரம்பித்த போதும் இரண்டாம் தவணைப் பரீட்சையை வைக்க முடியாத அளவுக்கு வடக்கு மாகாண கல்வி அமைச்சு மற்றும் வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் நிலைமை உள்ளது.

இந்த விடயங்களைச் சீர்செய்ய வலியுறுத்தியே எமது போராட்டம் அமையவுள்ளது– என்றார்.

## யாழ்.பல்கலை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொல்லை தொடர்ந்தமையால், பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தின் பின்புற வீதியூடாக விடுதிக்குச் செல்லுகின்ற மற்றும் அந்தப் பகுதியிலுள்ள வாடகை அறைகளுக்கு செல்லும் மாணவிகளையும் இலக்கு வைத்து, அங்கு வரும் இளைஞர்கள் தமது அந்தரங்க உறுப்புக்களைக் காட்டுவதுடன், மிக மோசமான ஆபாச வார்த்தைகளால் வசைபாடுகின்றனர் என்றும் மாணவிகள் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள் ளனர்.

பல்கலைக்கழகத்துடன் தொடர்பு படாத இளைஞர்களே இவ்வாறான அநாகரிகச் செயற்பாட்டைத் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்று மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், பல்கலைக்கழக மாணவிகள் இருவரை வழிமறித்து ஆபாச வார்த்தைகளால் பேசியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் மோட்டார் சைக்கிளின் இலக்கத்துடன் கோப்பாய் பொலிஸில் உடனடியாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொலிஸார் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் கண்காணிப்பு அந்தப் பகுதிகளில் நேற்று மாலையிலிருந்து பலப்படுத்தப்பட்டுள்ளது.

## முதல் அமர்வு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எதிர்வரும் ஜனவரி மாதம் 17ஆம் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன், எதிர்வரும் 10ஆம் திகதி சனிக்கிழமைக்குப் பதிலாக 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்குப் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

எதிர்வரும் 8ஆம் திகதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் மூன்றாம் மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதேவேளை, 2023ஆம் ஆண்டுக்கான பாதீட்டு ஒதுக்கீடுகள் தொடர்பான 12ஆம் நாள் குழுநிலை விவாதம் இன்று இடம்பெறுகின்றது

## வேலணை பிரதேச......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சபையின் வரவு – செலவுத் திட்டத்துக்கான விசேட கூட்டம் இன்று சபையின் தவிசாளர் ந.கருணாகரகுருமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

பலத்த விவாதத்துக்குப் பின்னர் தவிசாளர் ந.கருணாகரகுருமூர்த்தியால் 'பட்ஜட்' மீது வாக்கெடுப்பு கோரப்பட்டபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 8 உறுப்பினர்களும் வாக்கெடுப்பைப் புறக்கணிப்பதாகத் தெரிவித்து வெளிநடப்புச் செய்தனர்.

இந்தநிலையில் வரவு – செலவுத் திட்டத்துக்காக ஆதரவாக 9 உறுப்பினர்களும், எதிராக ஓர் உறுப்பினரும் வாக்களிக்க, ஓர் உறுப்பினர் நடுநிலை வகித்தார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் 6 உறுப்பினர்கள், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 2 உறுப்பினர்கள், தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஓர் உறுப்பினர் என 9 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஓர் உறுப்பினர் எதிர்த்து வாக்களித்ததுடன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஓர் உறுப்பினர் நடுநிலை வகித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஓர் உறுப்பினர் இன்றைய கூட்டத்துக்கு வருகை தரவில்லை.

இருபது உறுப்பினர்களைக் கொண்ட வேலணை பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக 8 உறுப்பினர்களும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி சார்பாக 6 உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பாக 2 உறுப்பினர்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்பனவற்றின் சார்பாக தலா ஓர் உறுப்பினரும் அங்கம் வகிக்கின்றனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.12.2022 இல் வெளியிடப்பெற்றது.